பிரதமர் கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நபார்டு திட்டத்தின்கீழ் கிராமப்புறச் சாலைப் பணிகளை எடுத்துக்கொள்ளும்பொழுது, இத்தகைய ஆறுகளின் குறுக்கே இருக்கக்கூடிய பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மேம்படுத்தி அந்தச் சாலைகளை அமைப்பதற்கு முன்னுரிமை கொடுத்து, பணிகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். PMGSY மற்றும் நபார்டு போன்ற திட்டங்களின்கீழ் உயர்மட்டப் பாலங்கள் அமைக்கும் பணிகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

234—

மகளிர் கலைக் கல்லூரி

***6060—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, வீரபாண்டியில் புதிய மகளிர் கலைக் கல்லூரியைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 28

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வீரபாண்டி தொகுதி, வீரபாண்டியில் புதிய மகளிர் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னை வருத்திக்கொண்டு, சுட்டெரிக்கும் சூரியனை மறைத்து, குளிரூட்டும் சந்திரனாக தமிழக மக்களின் வாழ்வினைக் காப்பாற்றிய தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நலனை மேம்படுத்துவதும், அவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்திடுவதும், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களைப் பேணிக் காப்பதும்தான் சிறந்த அரசனின் கடமையாகும். அதுபோல், தமிழ்நாட்டு மக்களைப் பேணிக் காப்பதில் சிறந்து விளங்கும் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியைச் சுற்றி 20 கி.மீ. தொலைவிற்குள் பெரிய பள்ளிகள் உள்ளன. ஆனால், மகளிர் கலைக் கல்லூரி அங்கே கிடையாது. தனியார் கல்லூரிகளுக்குச் சென்றால், அங்கே அதிகப்படியான கல்விக் கட்டணம் கேட்பதால், ஏழை எளிய மாணவிகள் படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே நின்றுவிடுகின்றனர். பள்ளிகளில் எப்படி அரசு மாதிரிப் பள்ளிகள் துவங்கப்பட்டனவோ அதுபோல், சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்றினைத் தொடங்க, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் அதிகமான மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்றும், அதில் +2 முடித்துவிட்டு வருபவர்கள் உயர் கல்வி பெறுவதற்காக ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்து, வாழ்ந்து, மறைந்த இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலந்தொட்டு இன்றுவரை பார்த்தோமென்றால், உயர் கல்வி பெற வேண்டும் என்று எண்ணுகின்ற அத்தனை பேருக்குமே உயர் கல்வியை வழங்குகின்ற வகையில் அரசு செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 3 அரசுக் கல்லூரிகள் செயல்பட்டு வந்த நிலையில், இரண்டு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் இன்றைக்கு அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. அதேநேரத்தில், சேலம் மாவட்டத்தில் அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் இரண்டு; தனியார் சுயநிதிக் கல்லூரிகள் 32; ஆக, ஒட்டுமொத்தமாக 39 கல்லூரிகள் அங்கே செயல்பட்டு வருகின்றன. அங்கே தனியார் கல்லூரிகளில் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கின்ற காரணத்தினால், அரசுக் கல்லூரி தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள்.*

அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அங்குள்ள 3 கல்லூரிகளிலுமே ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 47 இடங்கள் காலியாக உள்ளன. அதேபோல் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக எடப்பாடி மற்றும் மேட்டூரில் செயல்படுகின்ற கல்லூரிகளிலே 129 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல், அரசு உதவிபெறும் இரண்டு கல்லூரிகளிலும் 364 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, அரசுக் கல்லூரிகளில் அரசு நிர்ணயம் செய்திருக்கின்ற கட்டணத்தை வசூலிக்கின்ற சூழ்நிலையிலும் இன்றைக்கும் அந்தக் கல்லூரிகளில் இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள்முதல் பார்த்தோமென்றால், வீரபாண்டிக்கு அருகில் சேலத்தில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்று இருக்கின்றது. சேலம்–8 என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதி,

[2018 ஜூன் 28

வீரபாண்டியிலேயிருந்து கிட்டத்தட்ட 15 கி.மீ. தூரத்தில்தான் இருக்கும். அதேபோல் சேலம்–7 என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியில் இருபாலர் கல்லூரி ஒன்றும் இருக்கின்றது. எனவே, அந்தக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேருவதற்குண்டான வழிவகையைச் செய்கின்ற வகையில் பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த 2011 முதல் 2018 வரை பார்த்தோமென்றால், இளநிலைப் படிப்பில் (U.G.) 4 பாடப் பிரிவுகளும், முதுநிலைப் படிப்பில் (P.G.) 8 பாடப் பிரிவுகளும், M.Phil. படிப்பில் 5 பாடப் பிரிவுகளும், Ph.D. படிப்பில் 2 பாடப் பிரிவுகளும் என 19 பாடப் பிரிவுகளை புதியதாக அந்த மகளிர் கலைக் கல்லூரியில் மட்டுமே தோற்றுவித்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அம்மா அவர்களின் வழியில் ஆட்சி செய்யக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான அரசால், இந்த ஆண்டு 264 புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சேலம்–8–ல் இருக்கக்கூடிய மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 3 பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆக, அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில், போதுமான அளவில் மாணவர்கள் சேர்ந்து உயர் கல்வி படிக்கக்கூடிய வாய்ப்பை அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. அதேவேளையில், சேலத்தில் இருக்கக்கூடிய 3 அரசுக் கல்லூரிகளிலும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற வகையில், 40 வகுப்பறைகளையும், 8 ஆய்வகங்களையும் கொண்ட கட்டடங்கள் 9 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள் என்ற வகையில் 210 கோடி ரூபாயை அரசானது ஒதுக்கியது. அந்த ரூ.210 கோடியில், 9 கோடியே 71 இலட்சம் ரூபாய் 3 கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டு, அக்கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆக, மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்திலே அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவிகளுக்கென்று தனியாக ஒரு மகளிர் கல்லூரி ஏற்கெனவே சேலத்தில் இருக்கிறது. வீரபாண்டியில் புதிதாக ஒரு கல்லூரியை கூடுதலாக அமைக்கும் தேவை ஏற்படின், அதுகுறித்து ஆய்வு செய்து, வரும் காலங்களில் பரிசீலனை செய்யப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2018 ஜூன் 28]

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி அமைக்க ஆய்வு செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருமயம் தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறுகிற மேல்நிலைப் பள்ளிகள், தனியார் சுயநிதி மேல்நிலைப் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், அரசின் சார்பில் எந்தவிதமான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளோ அல்லது பொறியியல் கல்லூரிகளோ அல்லது அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களோ கிடையாது. எனவே, திருமயம் தொகுதியில் குறிப்பாக, பொன்னமராவதி அல்லது அரிமளம் பேரூராட்சியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய புதுக்கோட்டை மாவட்டத்தில், ஏற்கெனவே 3 அரசுக் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் கல்லூரியும் இருக்கின்றன. மேலும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக இருந்த ஒரு கல்லூரி, தற்போது அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், 12 சுயநிதிக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆக மொத்தம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் சுய நிதிக் கல்லூரிகள் என்ற வகையில், 17 கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியில்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உயர் கல்வி பெறுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல், ஏற்கெனவே அங்குள்ள 4 அரசுக் கல்லூரிகளிலும், ஓர் அரசு உதவி பெறும் கல்லூரியிலும் போதுமான இடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தான் சார்ந்திருக்கின்ற தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அவர் சார்ந்திருக்கின்ற தொகுதியிலிருந்து வரப்பெறுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்து, எதிர்வருங்காலங்களில் அரசானது அதுபற்றி ஆய்வு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

235—

நேரடி கொள்முதல் நிலையம்

***9211—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் தொகுதியில் கடந்த இரண்டு கொள்முதல் பருவங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் ஏதும் வரப்பெறாததால், கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. எனவே, மேலூர் தொகுதியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க தற்போது அவசியம் ஏற்படவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.